# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம்




## ஆண்டுமலர்

## 2018 - 2019

Scanned with CamScanner

# மலர்க்குழு

முனைவர். திரு. **கோ.இராஜவேல்** M.Sc., M.Phil., M.Ed., Ph.D.,
முதல்வர்

பேரா. திரு. **ச.மணிவண்ணன்** M.L.I.Sc., M.Phil., SET
இணை நூலகர்

செல்வி. **V.பவித்ரா**
பி.எட். இரண்டாமாண்டு – தமிழ்

செல்வன். **M.சோமசுந்தரம்**
பி.எட். முதலாமாண்டு – ஆங்கிலம்

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் - 638183.

# ஆண்டறிக்கை 2018 - 2019

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியர் பெருமக்களே! அலுவலக ஆன்பர்களே! இனிய மாணவச் செயல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 64-வது ஆண்டு விழா, விளையாட்டு விழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று, சாதனைகள் நிறைந்த இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரியின் வரலாறு :**

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசிரியர் எஸ்.ஐசக் எம்.ஏ.எல்.டி., அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றப்பின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும் 1974 ஆம் ஆண்டு எம்.எட்., பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1989 ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாக இருந்த எம்.எட்., முதுநிலை பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண். G.O.M.S. No. 543 Dt. 16.04.1990 ஆணையின்படி நமது கல்லூரி CTE (College of Teacher Education) அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க் அனுமதி வழங்கப்பட்டது. இக்கல்லூரி, மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டு முதல் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

**கல்லூரி மாணவர் சேர்க்கை :**

2008-2009 ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் சென்னை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தில் (TNTEU) இணைவு பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய அங்கீகாரக்குழு NAAC குழுவினரால் மறுஆய்வு செய்யப்பட்டு "B" தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் விண்ணப்பித்தோரின் தரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2008-2009 ஆம் ஆணடில் முதல் மாநில அளவில் பி.எட். சேர்க்கை கலந்தாய்வு முறையில் நடைபெற்று வருகிறது. 2018-2019ம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை குழுவில் முதல்வர் முழு கூடுதல் பொறுப்பு முனைவர். வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள், கல்லூரி இணை நூலகர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து சேர்க்கைப் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டனர்.

இவ்வாண்டு கலந்தாய்வு சென்னை, லேடி வெலிங்டன் கல்வியியில் மேம்பாட்டு நிறுவனத்தில் நடத்தப்பட்டு கலந்தாய்வில் தேர்வான மாணவர்கள் 20.07.2018 முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் 1.08.2018 முதல் துவக்கப்பட்டன. இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் 09.07.2018 முதல் துவக்கப்பட்டன.

2015-ஆம் கல்வியாண்டு வரை இக்கல்லூரி கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் கட்டுபபாட்டில் செயல்பட்டு வந்தது. 2016 முதல் தருமபுரி கல்லூரிக்கல்வி இணை இயக்குநகர் அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Scanned with CamScanner

**மாணவர் மன்றங்கள்:**

கீழ்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்விற்கும், பொறுப்புணர்விற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளனர் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

## பி.எட். இரண்டாமாண்டு (2017-2019) மற்றும் முதலாம் ஆண்டு (2018-2020) மாணவர் மன்றம்

| வ. எண் | பதவி | இரண்டாமாண்டு | முதலாமாண்டு |
|---|---|---|---|
| 1. | மாணவர் தலைவர் | **S.விவேக்** (Maths) | **R.S.P.பவித்ரன்** (Eng) |
| 2. | மாணவர் துணைத் தலைவர் | **M.புனிதா** (Eng) | **K.S.கீர்த்தனாஸ்ரீ** |
| 3. | தமிழ்த்துறைச் செயலர் | **K.வித்யா** (Tamil) | **K.P.கலையரசன்** |
| 4. | ஆங்கிலத்துறைச் செயலர் | **R.ஷர்மிலி** (Eng) | **K.P.சுலைமான்** |
| 5. | வரலாற்றுத் துறைச் செயலர் | **T.ஜீவா** (His) | **T.லியோ பிரான்சிஸ்** |
| 6. | உயிரறிவியல் துறைச் செயலர் | **P.**அருள்மொழிச்செல்வி (Bio. Sci) | **S.கிருபாகரன்** |
| 7. | பொருளறிவியல் துறைச் செயலர் | **A.**செந்தமிழ்ச்செல்வி (Phy.Sci) | **C.மணிமேகலை** |
| 8. | கணிதத் துறைச் செயலர் | **M.சத்யா** (Maths) | **M.பூபாலன்** |
| 9. | விளையாட்டுத்துரை செயலர் | **M.மோகன்குமார்** (His) | **M.சதீஷ்** |
| 10. | சமூகப் பணி மன்றச் செயலர் | **I.பாலசுப்ரமணியம்** (Eng) | **K.மகேஷ்வரி** |
| 11. | ஆண்டுமலர் செயலர் | **V.பவித்ரா** (Tamil) | **M.சோமசுந்தரம்** |
| 12. | கைகலைத்துறை செயலர் | **K.ஸ்ரீதேவி** (Bio Sci) | **S.ராஜேஸ்வரி** |
| 13. | கேள்விக்காட்சி கல்வித்துறைச் செயலர் | **S.வேல்** (Phy. Sci) | **A.குணசேகர்** |
| 14. | தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறைச் செயலர் (ICT) | **P.மேகநாதன்** (Eng) | **A.தணிகாசலம்** |
| 15. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கச் செயலர் (YRC) | **R.ராதிகா** | **M.ஜெயவேல்** |
| 16. | சிவப்புச்சுருள் சங்கம் | **அழகேஷ்வரி** | **S.வெங்கடேஷ்** |
| 17. | ஆசிரியர் மன்றச் செயலர் | **கௌதம் .J** | **S.வேல்முருகன்** |
| 18. | நூலகத்துறைச் செயலாளர் | **M.சந்திரன்** | **G.அரவிந்த்** |

இம்மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை மிகச் சிறப்பான முறையில் செய்து தங்களின் தனித் தன்மையை தக்க வைத்துக் கொண்டமைக்காக அனைவரையும் பாராட்டுகிறேன்.

**மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி:**

இக்கல்வியாண்டில் பி.எட். இரண்டாமாண்டு பயிற்சி மாணவ, மாணவியர்கள் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவாட்டங்களில் உள்ள பல்வேறு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2018 முதல் 16 வாரங்கள் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உற்றுநோக்கல் பயிற்சியை மேற்கொண்டனர்.

Scanned with CamScanner

| வ.எண். | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, குமாரபாளையம் |
| 2. | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குமாரபாளையம் |
| 3. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பவானி |
| 4. | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பவானி |
| 5. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சித்தோடு |
| 6. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பள்ளிபாளையம் |
| 7. | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பள்ளிபாளையம் |
| 8. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கவுந்தப்பாடி |
| 9. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சிங்கம்பேட்டை |
| 10. | அரசு மேல்நிலைப் பள்ளி, பல்லக்காபாளையம் |
| 11. | அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு |
| 12. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நட்டுவம்பாளையம் |
| 13. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வெள்ளோடு |
| 14. | அரசு மேல்நிலைப் பள்ளி, தளவாய்பேட்டை |
| 15. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வேம்படிதளம் |
| 16. | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, எடப்பாடி |
| 17. | காமராஜர் அரசு மேல்நிலைப் பள்ளி. அம்மாபேட்டை, சேலம் |
| 18. | அரசு உயர்நிலைப்பள்ளி, புத்தர் வீதி, குமாரபாளையம் |
| 19. | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கவுந்தப்பாடி |
| 20. | அரசு உயர்நிலைப் பள்ளி, சின்னநாயக்கன்பாளையம், குமாரபாளையம் |
| 21. | அரசு உயர்நிலைப் பள்ளி, வேமங்காட்டுவலசு, குமாரபாளையம் |
| 22. | அரசு உயர்நிலைப் பள்ளி, கத்தேரி, குமாரபாளையம் |
| 23. | அரசு உயர்நிலைப் பள்ளி, பெரியபுலியூர் |

மேற்கண்ட பள்ளியில் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள அனுமதியளித்த சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட கல்வி முதன்மை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த உதவிய தலைமையாசிரியர்கள், வழிகாட்டிகளாய் இருந்து ஊக்கப்படுத்தியுள்ள ஆசிரியர்கள், கற்பித்தல் பயிற்சி சிறப்பாக நடைபெற மாணவ மாணவியரின் விருப்பத்திற்கேற்ப பள்ளிகளை தேர்வு செய்து கற்பித்தல் பயிற்சியை சிறப்பாக முடிக்க உதவிய முதல்வர் பொறுப்பு மற்றும் தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர். வெ.கலைச்செல்வி அவர்களுக்கும் கல்லூரியின் சார்பில் உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

## மாணவ/மாணவியர் விடுதிகள் :

இக்கல்வியாண்டில் கல்லூரி விடுதியில் 23 மாணவர்களும் 65 மாணவியர்களும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து தங்கி பயில்கின்றனர். விடுதியின் காப்பாளராக முதல்வர் பொறுப்பு முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள். 02.05.2018 – 31.07.2018 வரை பணியாற்றினார். 01.08.2018 முதல் முதல்வர் முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் காப்பாளராக பணியாற்றி வருகிறார். துணைக் காப்பாளராக முனைவர் மொ.ரவி அவர்கள் சிறப்பாக பணியாற்றி வருகிறார். பெண்கள் விடுதியில் இடப்பற்றாக்குறை காரணமாக பெண்கள் விடுதி ஆண்கள் விடுதியாகவும் ஆண்கள் விடுதி பெண்கள் விடுதியாகவும் கல்லூரி ஆட்சி மன்றக்குழுவின் தீர்மானத்தின்படி ஜூலை 2018ம் ஆண்டு மாற்றப்பட்டன. இதற்குரிய அடிப்படை பணியினை மேற்கண்ட முதல்வர் பொறுப்பு முனைவர் வெ.கலைவச்செல்வி அவர்களுக்கும் துணைக் காப்பாளர் முனைவர் மொ.ரவி அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன். மாணவியர்களுக்கான விடுதியில் பயிற்றுநராக இக்கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் வெ.கலைச்செல்வி 01.06.2016 – 31.07.2018 வரை பணியாற்றினார். இவ்விடுதியில் குறைந்த செலவில் நிறைவான வகையில் ஒப்பந்த அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 90.00 ரூபாய் என்ற முறையில் உணவு வழங்கப்படுகிறது. விடுதியின் ஒப்பந்ததாரர் திரு. சபி, சமையலர் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் என் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்கள் விடுதி காவலராகப் பணியாற்றி வரும் திருமதி. தாண்டாயி அவர்களுக்கும், ஆண்கள் விடுதி காவலர் திரு. குருசாமி அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

★ **நூலகச் செயல்பாடுகள்**

இக்கல்லூரியில் 2018-2019 ஆம் கல்வியாண்டில் ரூ. 18,000 அரசு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதில் 79 புத்தகங்கள் வாங்கப்பட்டன. இக்கல்லூரி நூலகத்தில் மொத்தம் 14,762 புத்தகங்கள் உள்ளன. இக்கல்லூரி நூலகம் முற்றிலும் திறந்த முறையில் இணையதளத்துடன் மாணவர்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியின் இணை நூலகராக பேராசிரியர். ச.மணிவண்ணன் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பாக நாளிதழ் மற்றும் மாத இதழ்கள் வாங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவர் தனது சொந்த செலவில் Employment News செய்தித்தாளை இந்த ஆண்டு முழுவதும் மாணவர்கள் பயன்பாட்டுக்கு வழங்கியுள்ளார். அவர்களுக்கு கல்லூரியின் சார்பில் பாராட்டுதலையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ **முன்னாள் மாணவர் சங்கம்**

இக்கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் 25.09.2016 முதல் தொடங்கி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராக கல்லூரி முதல்வர் முனைவர். கோ.ராஜவேல் அவர்களும், மற்றும் பொறுப்பாளர்களாக முன்னாள் மாணவர்களும் பொருளாளராக பேராசிரியர். ச. மணிவண்ணன் அவர்களும் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். 2017-18 ஆம் ஆண்டிற்கான சங்கக்க கணக்குகள் தணிக்கையாளர் மூலம் தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 1.05.2018 தேதியில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர். க.மகுதம்மாள் அவர்கள் தலைமையில் 1981-82 ஆம் ஆண்டு கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி இக்கல்லூரியில் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை சங்கப் பொருளாளர் பேராசிரியர் ச.மணிவண்ணன் சிறப்பாக செய்திருந்தார். அவருக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

★ **கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள் :**

18.07.2018 அன்று முனைவர். வெ.கலைச்செல்வி பொறுப்பு முதல்வர் அவர்கள் தலைமையில் இரண்டாம் ஆண்டு B.Ed., மாணவர்களுக்கு முனைவர் இரா.செல்வமதி சுகிர்தா, உதவிப் பேராசிரியர், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி, முனைவர் வா.பிரியா உதவிப் பேராசிரியர் பொருளறிவியல் துறை, ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி மற்றும் திரு. பார்த்திபன் முதல்வர் S.S.M. லட்சுமியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகியோர் பாடத்திட்டம் மற்றும் கற்றல் கற்பித்தல் தொடர்பாக சிறப்பு வகுப்புகள் நடைபெற்றது. பாட வல்லுனர்களின் சிறப்பு வகுப்புகள் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு மிகவும் பயனளிப்பதாக இருந்தது.

01.08.2018 முற்பகல் நமது கல்லூரியின் முதல்வர் பொறுப்பினை முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

05.09.2018 அன்று நமது கல்லூரி வளாகத்தில் ஆசிரியர் தின விழா முதல்வர் தலைமையில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

24.9.2018 அன்று நமது கல்லூரி முதல்வர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

28.9.2018 அன்று 64 ஆம் ஆண்டு பேரவைத் துவக்கவிழா நடைபெற்றது. முதல்வர் விழாவிற்கு தலைமையேற்க சிறப்பு விருந்தினராக முனைவர். மா.சகுந்தலா எம்.எஸ்.ஸி., எம்.பில்., பி.எச்.டி கல்லூரி கல்வி இணை இயக்குநர் தருமபுரி மண்டலம் கலந்து கொண்டார். இவ்விழாவில் முதல் மற்றும் இரண்டாமாண்டு மாணவ பிரதிநிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். அன்னாருக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

16.10.2018 அன்று குமாரபாளையம் காவல் துறையிலிருந்து B.Ed., மாணவர்களுக்கு "SOS காவலன" மற்றும் 100 பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

16.10.2018 அன்று கைகளைச் சுத்தப்படுத்தும் தினம் கல்லூரி வளாகத்தில் முதல்வர் தலைமையில் கொண்டாடப்பட்டது. கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியர் கைகளைச் சுத்தப்படுத்துவது குறித்து மாணவர்களுக்கு தெளிவான விளக்கம் கொடுத்தார்.

17.10.2018 அன்று ஆயுத பூஜை முதல்வர் தலைமையில் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

Scanned with CamScanner

22.10.2018 திங்கள் அன்று தமிழ்நாடு பட்டதாரி கூட்டமைப்பு சார்பில் திரு. R.கண்ணன் ஐயா அவர்கள் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு போட்டி தேர்விற்கு தயார் செய்தல் குறித்து விளக்கமளித்தார்.

23.10.2018 அன்று எஸ்.எஸ்.எம். லட்சுமியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாக முதல்வர் திரு.ஆ.பார்த்திபன் மற்றும் திரு. த.உதயகுமார் அவர்கள் நமது முதலாமாண்டு மாணவர்களுக்கு சாரண சாரணியர் இயக்கம் பற்றி பயிற்சியளித்தனர்.

24.10.2018 மற்றும் 25.10.2018 ஆகிய இரு தினங்களுக்கு முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கைகலைப்பயிற்சி திருமதி. வசந்தகுமார் அவர்களால் வழங்கப்பட்டது.

26.10.2018 அன்று மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் முனைவர் %மணிகண்டன் விரிவுரையாளர், உளவியல் வல்லுனர் அவர்கள் குழந்தை உளவியல் குறித்து தெளிவான விளக்கமளித்தார்.

31.10.2018 அன்று சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினம் தேசிய ஒருமைப்பாடு தினமாக முதல்வர் தலைமையில் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

01.11.2018 அன்று YRC மற்றும் ரோட்டரி கிளப் சார்பில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

1.12.2018 அன்று YRC மற்றும் ரோட்டரி கிளப் சார்பில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

9.1.2019 அன்று கல்லூரி வளாகத்தில் குடிமைப்பயிற்சி பணிமுகாம் முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

22.01.2019 அன்று கல்லூரி விளையாட்டு விழா முதல்வர் தலைமையில் திருமதி. K.தேவி காவல் ஆய்வாளர் குமாரபாளையம் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ள விழா சிறப்பாக நடைபெற்றது.

20.2.2019 மற்றும் 21.2.2019 ஆகிய இரண்டு நாட்களுக்கு இரண்டாமாண்டு மாணவர்களுக்கு செய்முறைத்தேர்வு நடைபெற்றது.

8.3.2019 அன்று பெண்கள் தினவிழா மிகச் சிறப்பாக முதல்வர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

22.3.2019 அன்று கல்லூரியில் வளாகத்தேர்வு நடைபெற்றது. மேட்டூர் எம்.எ.எம். பள்ளி மற்றும் ஊத்துக்குளி எஸ்.ஆர்.பள்ளிகளிலிருந்து வருகை புரிந்தனர். வளாகத்தேர்வு இரண்டாமாண்டு மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

23.3.2019 அன்று இரண்டாமாண்டு மாணவர்களுக்கு பிரிவு உபசரிப்பு விழா முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

★ **அலுவலகப் பணி**

1. உதவித் தொகை :

மாணவர் நலன் பேணும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித் தொகை இரண்டாமாண்டு மாணவர்கள் 68 பேருக்கு ரூ. 3,69,825/- பெற்றுத் தரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித் தொகை இரண்டாமாண்டு மாணவர்கள் 22 பேருக்கு ரூ. 2,68,244/- பெற்றுத்தரப்பட்டுள்ளது. முதலாமாண்டு மாணவ மாணவியருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது.

2. பொதுப்பணித்துறை நிதி :

பொதுப்பணித்துறை கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதியாக ரூ.8 லட்சமும் மின்சாரம் தொடர்பான பணிக்காக ரூ. 2 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு நிதியாக ரூ.8 லட்சத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் கல்லூரியின் முன் நுழைவு வாயில் வளைவும் கட்டப்பட் உள்ளது. மேலும் அலுவலகப் பணியாளர்களுக்கான கழிவறை புதுப்பிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Scanned with CamScanner

3. திட்டமில்லா தலைப்பின்கீழ் நிதியுதவி:

தமிழக கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் நிதி ஒதுக்கீடாக நூலக புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.18,000/-மும் இயந்திரங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் வாங்கும் பொருட்டு ரூ.18,000/-மும், பழுதுபார்ப்பு பணிக்கான ரூ.8,000/- Machinery and Equipment-க்காக ரூ.14,000/-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அது முறையாக பயன்படத்தப்பட்டு கல்லூரியின் உள்கட்டமைப்பு வலுவூட்டப்பட்டுள்ளது.

4. பணி நியமனங்கள் :

- 02.05.2018 அன்று முதல்வர் முனைவர். க.மகுதம்மாள் அவர்கள் பதவி உயர்வு பெற்று மன்னர் சேதுபதி அரசு கலைக்கல்லூரி இராமநாதபுரத்திற்கு முதல்வராக சென்ற பின்னர் முதல்வர் (மு.கூ.பொறுப்பு) ஆக முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள் 03.05.2018 முதல் 31.07.2018 வரை பணியாற்றினார்.
- 01.08.2018 முதல் முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் கொழுஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி விருத்தாசலத்திலிருந்து முதல்வராக பதவி உயர்வு பெற்று பணியாற்றி வருகிறார்.
- கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இக்கல்லூரியில் உடற்கல்வி இயக்குநர் பணியிடம் காலியாக இருந்தத நிலையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு. 13.06.2018 முதல் நாமக்கல் மாவட்டம் காளப்ப நாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய முனைவர்.மொ.ரவி அவர்கள் அப்பணியிலிருந்து பணிவிடுப்பு செய்யப்பட்டு இக்கல்லூரியில் உடற்கல்வி இயக்குநராக பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.
- 08.06.2018 அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம் 8 லிருந்து பதவி உயர்வு பெற்று இக்கல்லூரி அலுவலகத்தில் உதவியாளர் திரு. து.ஜெயசீலன் அவர்கள் பணியாற்றி வருகிறார்.

5. பணி ஓய்வு

- 31.3.2019 பிற்பகல் கல்லூரியின் கல்வியியல் கணித உதவிப் பேராசிரியர் ஜெ.நவநீத கிருஷ்ணன் அவர்கள் பணி ஓய்வு பெற்றார். 1.04.2019 முதல் 31.5.2019 வரை மறுநியமன ஆணை கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

28.12.2018 அன்று கல்லூரி வளாகத்தில் புதிதாக ரூ.70/- லட்சம் செலவில் RUSA திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு முதல்வர் அவர்களால் காணொளி மூலம் செமினார் ஹால் திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் கோ.ராஜவேல் அவர்கள் மற்றும் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

கல்லூரி செமினார் ஹாலில் முதல் நிகழ்வாக 09.01.2019 அன்று பி.எட். மாணவர்களுக்கான குடியுரிமை பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் அனைத்து மாணவ், மாணவியர்களுக்கும் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் மாணவர்களின் பயன்பாட்டில் உள்ள நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக இக்கூட்டத்தில் நடைபெற்று வருகிறது.

மேலும் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு நாளுக்கான தமிழக அரசின் திட்டத்தின் கீழ் முதல்வரால் வழங்கப்பட்ட 110 கோடி திட்டத்தில் மூன்று வகுப்பறைகள் ஒரு ஆய்வுக்கூடம் ஆகியவை கட்டிமுடிக்கும் தருவாயில் உள்ளது. இது 2019-20 கல்வியாண்டில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அரசால் வழங்கப்படும் என்று எதிர்பார்கின்றோம்.

★ **கல்லூரி விழாக்கள்**

1. ஆசிரியர் தின விழா

இக்கல்லூரி வளாகத்தில் 5.09.2018 அன்று ஆசிரியர் தின விழா முதல்வர் முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. செல்வி. க.மகேஷ்வரி வரவேற்புரை நல்க அனைத்து பேராசிரியர்களும் கல்லூரி இணை நூலகர் அவர்களும், உடற்கல்வி இயக்குநர் அவர்களும் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். செல்வி. ந.ஷான்பேகம் நன்றியுரை வழங்கினார்.

Scanned with CamScanner

2. பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம்

கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் 1999 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளுக்கும், மாணவர்கள் நலன் சார்ந்த பணிகளுக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 24.09.2018 ஆம் தேதியில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம முதல்வர் முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் தலைமையில் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அதில் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பாளர்களாக புதிதாத தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்கள் மற்றும் பொருளாளராக முனைவர் வெ.மனோகரன் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

3. 64வது கல்லூரிப் பேரவை தொடக்கவிழா :

28.09.2018 அன்று 64 வது கல்லூரிப் பேரவை தொடக்க விழா விரிவுரை அரங்கில் முதல்வர் முனைவர். கோ.ராஜவேல் அவர்கள் தலைமையேற்க தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர். மா.சகுந்தலா அவர்கள் சிறப்புரை ஆற்ற விழா இனிதே நடைபெற்றது. 2018-19 ஆம் கல்வியாண்டில் சேர்ந்த மாணவர்களுக்குள் கல்லூரிப் பேரவை உறுப்பினர்களை தேர்வு செய்து அவர்கள் பதவியேற்று உறுத மொழி மேற்கொண்டனர்.

4. உலக கைகழுவும் நாள் :

16.10.2018 அன்று உலக கைகழுவும் நாள் முதல்வர் அவர்கள் தலைமையில் கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர். மொ.ரவி அவர்களால் கைகளை சுத்தம் செய்வது குறித்து செயல்முறை விளக்கம் கொடுக்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

5. ஆயுத பூஜை:

17.10.2018 அன்று ஆயுதபூஜை முதல்வர் தலைமையில் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

6. விளையாட்டு விழா

2018-19 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மற்றும் மண்டல அளவிலான கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நாமக்கல் மாவாட்டம் KSR கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 28.01.2019 அன்று நடைபெற்ற கலைப்போட்டியில் பிரிவில் பாட்டுப்போட்டியில் நம் கல்லூரி இரண்டாமாண்டு மாணவர் செல்வன் A.அழகேசன் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். மேலும் 29.01.2018 அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் நமது கல்லூரி முதலாமாண்டு மாணவர்கள் V.முருகேசன் 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடம், M.சதீஸ் உயரம் தாண்டும் போட்டியல் முதலிடம், V.பிரியா ஈட்டி எறியும் போட்டியில் முதலிடம், A.அந்தோணி அபேல் உயரம் தாண்டும் போட்டியல் இரண்டாமிடம், மேலும் 4X100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் முதலிடம் (P.கலையரசன், M.சதீஷ், V.முருகேசன், A.அந்தோணி ஆபேல்) முறையே முதலிடத்திற்கு தங்கப்பதக்கமும், இரண்டாம் இடத்திற்கு வெள்ளிப் பதக்கமும் பெற்றனர். 04.02.2019 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான கலைப் போட்டியில் நமது கல்லூரி இரண்டாமாண்டு மாணவர் A.அழகேசன் இரண்டாமிடம் பெற்றார். 05.02.2019 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டியில் நமது கல்லூரி முதலாமாண்டு மாணவர்கள் M.சதீஷ், உயரம் தாண்டுதல் போட்டியில் முதலிடம், மாணவி V.பிரியா ஈட்டி எறியும் போட்டியில் இரண்டாமிடம் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

★ **ஆசிரியர்களின் பணிசார்ந்த நிகழ்வுகள்**

இன்று சுட்ட செங்கற்களாக இருக்கும், மாணவர்களை நாளை கட்டிவைத்த மாளிகைகளாக்கும் முயற்சியில் தங்களை அர்பணித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர்களின் இவ்வாண்டிற்குரிய அரிய பணிகள் தங்களின் சிந்தனைக்கு...

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் கல்லூரி தொடர்பான பணிமேல் சென்ற கூட்ட விவரங்கள்

1. முனைவர் வெ.கலைச்செல்வி (இணை பேராசிரியர் – தமிழ்த் துறை)

- "RUSA" தொடர்பான பணிகளுக்காக 28.8.2018 அன்றும், NAAC தொடர்பான பணிகளுக்காக 5.10.2018 மற்றும் 6.10.2018 அன்றும் சென்னைக்கு பணிமேல் சென்றார்.
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தின் பாடாத்திட்டக்குழு உறுப்பினராக 04.10.2018 அன்று தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக கூட்டத்தில் கலந்து கொண்டார்.

Scanned with CamScanner

NAAC & NIRF தொடர்பாக ஒரு நாள் பணிமனைக்காக சேலம்-8 அரசு கலைக் கல்லூரியில் பங்கேற்றார். AIFUCTO கருத்தரங்கிற்காக கன்னியாகுமரிக்குச் சென்றார்.

2. திரு.ஜெ.நவநீத கிருஷ்ணன்

- 04.07.2018 முதல் 24.07.2018 முடிய கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தின் HRDC மனித வள மேம்பாட்டு மையம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டார்.
- மைசூரு Regional Education வளாகத்தில் உள்ள inter university center for Teacher Eeducation (IUCTE) நடத்திய Developing alternative Instructional Strategies for teaeching difficult conceept in science and Matheematics at secondary levele என்ற மூன்று நாட்கள் பணிமனையில் கணிதப் பாட வல்லுநராக பங்கேற்று நமது கல்லூரிக்கு சிறப்பு சேர்த்துள்ளார்.

3. திரு. முனைவர் வெ.மனோகரன்

- 2018-2019 ஆம் கல்வியாண்டு கல்வியியல் உதவிப் பேராசிரியர் முனவைர். வெ.மனோகரன் 17.07.2018 DIET மாயனூர் பாட வல்லுநர் செயலாய்வு குழு கூட்டத் தலைவராக செயல்பட்டார்.
- 04.1.2019 RUSA சென்னை DOTE மாநில திட்ட இயக்குநரகம் - குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- 1.3.2019 to 21.3.2019 - 21 நாட்கள் சென்னை பல்கலைக்கழகம் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டார்

4. முனைவர். மொ.ரவி

- 17.07.2018 நாமக்கல் மாவட்ட சேந்தமங்கலம் வட்டம் காரைக்குறிச்சி புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வட்ட அளவிலான தடகளப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
- 27.09.2018 தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பாக மாவட்ட தடகளப் போட்டியானது திருச்செங்கோடு வித்ய விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
- 05.10.2018 இந்தியப் பள்ளிகளுக்கிடையேயான (SGF1) மாணவ, மாணவிகளுக்கான மண்டல அளவிலான பூப்பந்துப் போட்டி நாமக்கல் மாவாட்டம், பாச்சல் பாவை பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. அப்போட்டிக்கு நடுவராக சென்றார்.
- 28.01.2019, 29.01.2019, 04.02.2019 மற்றும் 05.02.2019 ஆகிய நான்கு நாட்கள் % கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற மாவாட்ட, மண்டல கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு விழா ஒருங்கிணைப்பாளராக செயல்புரிந்தார்.

★ **கல்லூரி விழாக்கள்**

1. இக்கல்லூரிகள் 64 கல்லூரி ஆண்டு விழாஆ 5.4.2019 அன்று வெள்ளிக்கிழமை கல்லூரி கருத்தரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. K.S.இளவரசன் அவர்கள் தாளாளர் SSM பள்ளி குழுமம் குமாரபாளையம் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கோ. இராஜவேல் அவர்கள் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து விழாவை சிறப்பித்தனர்

2. 12.5.2019 அன்று கல்லூரி 1999-2000 ஆம் ஆண்டு பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்சசி கல்லூரி முதன்மை அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர். கோ.இராஜவேல் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர். பழனிசாமி அவர்களும் மற்றும் பேராசிரியர்கள் முன்னாள் மாணவர்கள் சுமார் 25 பேர் கலந்து கொண்டனர். விழா சிறப்பாக நடைபெற உரிய ஏற்பாடுகளை கல்லூரி முன்னாள் மாணவர் சங்க பொருளாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பேரா. ச.மணிவண்ணன் இணை நூலகர் சிறப்பாக செய்திருந்தார்.

3. கல்லூரி 2015-17ஆம் ஆண்டில் பி.எட். மாணவர்களுக்கு பட்டமேற்று விழா 18.5.2019 சனிக்கிழமை அன்று கல்லூரி கருத்தரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர். கோ.இராஜவேல் அவர்கள் விழாத் தலைமை ஏற்று, மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுகளை பொறுப்பாளர்களின் பேரா. ச.மணிவண்ணன் இணை நூலகர் சிறப்பாக செய்திருந்தார். இதில் அனைத்து பேராசிரியர்களும், அலுவலக பணியாளர்களும் 80 மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

Scanned with CamScanner

# அம்மா



நீயும் வேதியலும் ஒன்று தானம்மா!
இந்த உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களிலும்
முதன்மையாய் இருக்கும் "அணுவைப்" போன்று எனக்கு இருப்பவளே!

"தங்கத்தினைப்" போன்று இளகிய மனம் கொண்டவளே!
உனக்கு ஒரே எதிரி என் அப்பன் "இராஜதிராவகம்" தான்!

"Marie Anne Pierette Paulze" தர முடியாத விளக்கத்தை கூட தந்தவளே!
எனக்கு நீ வெளியில் காட்டும் அன்போ "Vander Waals Force" போன்றும்
ஆனால் மனதில் அளவுக்கடந்த "Covalent bond force" வைத்துக் கொண்டு வெளியில்
காட்டிக் கொள்ளாமல் இருப்பவளே

நான் சோர்வடையும் போது நீ கூறும் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு
"Dextrose" அளிக்கும் ஊக்கத்தை விட அதிகம் ஊக்கம் தந்தது!

உனக்கு மனக்கவலை வந்தால் கூட என் முன் இருந்தால் "Glycerine" தெளித்தால் கூட
உன் கண்களில் இருந்து கண்ணீரை வெளிவராமல் அடக்கியவளே!

அதனையும் மீறி கண்ணீர் வந்தால் அந்த கண்ணீருக்கோ
"Sulphuric Acid" ஐ விட வலிமையுடையது!

"SEM, TEM" இயந்திரங்கள் கூட தோற்றேபோகும்
நீ என்னை பற்றி ஆராயும் திறனுக்கு!

சுயநலவாதிகளிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்வதற்காகாவே
என்னை Oxygen போல் படைத்தாயோ...!

A.GUNASEKAR
18B019
Physical Science

---

# அழுகை

*குழந்தையின் அழுகை தாய்க்கு தெரியும்*
*மகளின் அழுகை தந்தைக்கு தெரியும்*

*பெண்ணின் அழுகை காதலனுக்கு தெரியும்*
*மனைவியின் அழுகை கணவனுக்கு தெரியும்*

*தாயின் அழுகை மகனுக்கு தெரியும்*
*ஆணின் அழுகை யாருக்கு தெரியும்*
*தெரிந்தால்*

*வானமே கண்ணீர் விட்டு அழும்..!*

- க.சிவா, தமிழ்த்துறை

# அன்னையே!

காவிரியே கரைபுரண்டு ஓடும்போது
காஷ்மீரில் அமைதியோ கூடும்போது
ஜீன்ஸ் எல்லாம் புடவையாக மாறும்போது
என் ஜீன் எல்லாம் தமிழ் பண்பாடு
ஊறும்போது

பயிரெல்லாம் செழிப்பாய் வளரும்போது
பாலியல் கொடுமைகள் ஒழியும்போது
ஈன்றெடுக்க ஆசைப்படு என்னையே!
அதுவரை உன் கருவிலேயே
காத்திருக்கேன் அன்னையே!



- C. Manimegalai, Ist Year, B.Ed., Physical Science

# தீராக்கடன்

அழுக்கான உலகிற்கு என்னை
வெளுப்பாக்கித் தந்தவள்!

அழகான என் ஜனனத்திற்கு
அரும்பாடு பட்டவள்!

தவிக்கின்ற போதெல்லாம்
எனக்கு ஆகாரம் இட்டவள்!

என் தந்தையை எனக்கு
அடையாளம் காட்டியவள்!

எந்தன் வளர்பிறை நாட்களில்
துணைக் கொடியாய் நின்றவள்!

கல்விக் காலங்களில் கண்போல்
என்னைக் கண்காளித்தவள்!

களைப்பின்றிக் கற்பதற்குக்
கண்விழித்துக் கிடந்தவள்!

என் பிறப்புக் காரணமாய்த்
தன் பிறப்பை மறந்தவள்!

செழிப்பான என் வாழ்விற்கு
செருப்பாக உழைத்தவள்!

செய்நன்றி பாராது
என் எதிர்கால வாழ்வாக செயல்பட்டு
என் அன்னைக்கு நான் எக்கருமம்
செய்தாலும் என் கடன் தீராது!!!

V. பிரியா, 18B064
உயிரறிவியல்

# கடினம்

கற்பது தான் கடினம் என்றிருந்தேன்
-அப்பொழுது

இல்லை கற்பிப்பது தான் கடினம் என
புரிந்து கொண்டேன் இப்பொழுது
ஒரு பயிற்சி ஆசிரியராக...

S. கிருபாகரன், முதலாமாண்டு கல்வியியல்,
(உயிரறிவியல்)

# விளையாட்டில் நான்

என் வெற்றியின் ஆணிவேர்
என் முயற்சியின் மூலதனம்

என் சாதனையின் ஏணிப்படி
என் உடலின் உயிர்மூச்சு

என் வாழ்க்கைப் பூவின் வாசனை
அனைத்தும் கலைக் கோவிலின்
விளையாட்டு மைதானத்திலே
நான் சிந்திய வியர்வைத் துளிகள்!

M. சதீஷ்,
விளையாட்டுத்துறை செயலர்



# சிட்டுக்குருவிகளின் ஊர்வலம்

இரு மலைகளின் நடுவில் ஒரு ஓடம்..!
ஓடத்தில் சிட்டுக்குருவிகளிரண்டு ஆடும்

ஆடும் சிட்டுக் குருவிகளைக்கண்டு
சோலை மலர்கள் தேன் துளி சொட்டும்..!

சொட்டும் தேன் துளிகளை உண்டு
இரண்டு தேன் சிட்டுகள்
களவொழுக்கத்தில் உரையாடும்...!

உரையாடும் தேன் சிட்டைக் கண்டு
கருமேகங்கள் மழைத்துளி சொட்டும்..!

சொட்டும் மழைத்துளிகளில் சிட்டுக்
குருவிகள் ஆனந்தராகம் பாடும்...!

பாடும் ராகத்திற்கு கருங்குயில் மெல்லிய
இசை போடும்

இசை மழையில் நனைந்து உழாபோகிறது
இளஞ் சிட்டுக் குருவிகளிரண்டு...!

ச. தமிழரசன்
முதலாமாண்டு பி.எட்.,
தமிழ்த்துறை

Scanned with CamScanner

# பெண் என்னும் உடல்

பெண்களின் உடலில்...
வியர்வை முத்து..!

கண்களோ காய்சலுக்கு பத்து
கருங்கூந்தலோ கட்டி இழுக்கும் காத்து
இப்படி வர்ணித்து...
சூடிவிட்டான் மாலையாய் கோத்து
பெண்ணின் உடலை !

சிலையென்று கூறி
சிலையாக வடித்துவிட்டான்
சிலை கூட அழுதுவிடும் உயிர்
பெற்றுவிட்டால், இங்கே அழகூட
முடியவலில்லை... அங்கே தடுக்கவும்
முடியவில்லை... கயவர்களின் பார்வையில்
பெண்ணின் உடலை !

தடுத்திருப்பாள்...
இச்சை எனும் பாத்திரத்தில் தத்தளிக்கும்
மீனாய் சிக்கிக் கொண்டபோது.. ஆனால்,
அதையும் தடுத்துவிட்டனர்
அடிமை இனம்...

நீ என்று கூறி கட்டிவிட்டனர் பெண்ணின்
உடலை!!

விட்டுவிட்டால் என்றெண்ணி
கட்டிவிட்டான் தாலி...!
எண்ணிவிட்டாள் அதுவே அவளுக்கு
வேலி..!
தெரிந்தும் பகிர்கிறாள் மனைவி...
பெண்ணின் உடலை!!!

பார்த்தேன் ...
விலங்குகள் சுவரில் உரசுவதை
கேவலம்... தோளுக்கு ஆசைப்பட்டு
மகளையும் உரசுகிறான் தந்தை... சுவரென
பெண்ணின் உடலை...!

துட்டுக்கு தரும் கட்டுக்கு மானம்விட்டு!
ஆடுகிறார்கள் அழகிகள்
கூடையில் சிக்கிய கோழிகள்
பருகுகிறார்கள் பெண்ணின் உடலை!!

உடலுக்குள் இருக்கிறது உள்ளம்...
பெண்களாய் பிறந்ததா குற்றம்
அவளுக்கும் தோன்றாதா சீற்றம்
சீறினால் அடங்கிவிடும் கொட்டம்
மாறிவிடும் மனிதனின் நாற்றம்
போற்றுங்கள் தேடிச்சென்று தாயாக
பெண்ணின் உடலை

செ.ந. ரிதன்யா
முதலாமாண்டு கல்வியியல்

---

# நட்பு...

இரத்தத்தில் மலர்ந்த உறவல்ல
இரத்தையே கொடுக்கும் உறவு
எதிர்பார்ப்பு என்பது எங்களுக்குள் இல்லை
எந்நாளும் இங்கு சண்டைகள் கிடையாது
புன்னகையோடு நாளும்
பொழுதுகளைக் கழிப்போம்
பூக்களைப் போல புதுமையாக இருப்போம்

சோதனைகளை எல்லாம் சாதனைகளாக
மாற்றிய தருணங்கள் மனதினில்

நிழல்கள் என்னை தொடர்வதுபோல்
என் நினைவுகள் உன்னை தொடர்கிறது

காலங்கள் பல காயத்தினை
தந்த போதிலும்
கண்ணியமான உறவு நம்முடையது.

மு.பூபாலன்
முதலாமாண்டு கல்வியியல்
கணிதவியல்

Scanned with CamScanner

## கல்லூரி

கோவிலும் அல்ல
ஆனால் தெய்வம் குடிகொண்டிருக்கும்
பூங்காவும் அல்ல
ஆனால் மலர்கள் கொஞ்சியிருக்கும்
சந்தையும் அல்ல ஆனால் சத்தம்
கொண்டிருக்கும்
பாலைவனும் அல்ல ஆனால் சில கணம்
நிசப்தமாயிருக்கும்
அடர்ந்தகாடும் அல்ல
ஆனால் சில கணம் நிசப்பதமாயிருக்கும்
அடர்ந்தகாடும் அல்ல
ஆனாஆல், மரங்கள் அடர்ந்திருக்கும்
நகரமும் அல்ல
ஆனால் கட்டிடங்கள் அங்கிருக்கும்
கேளிக்கைகளும் அல்ல
ஆனால் அறிவங்கே மிகுந்திருக்கும்.
ஆசிரியர்களும் அல்ல நாங்கள்
ஆனால் மாணவ ஆசிரியர்கள் அங்கே
பேராசிரியர்களும் அல்ல அவர்கள்
ஆனால் எங்கள் தாய், தந்தையாவர்
கல்லூரியும் அல்ல
ஆனால் எங்கள் உலகம்
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்

- K.Kavipriya,
IInd B.Ed., Biological Science

## அம்மா


எனக்கு ஒரு ஆசை
அடுத்த ஜென்மம் ஒன்றிருந்தால்
மனிதனாக பிறக்க வேண்டுமென்பதில்லை
உன் பாதமாக பிறக்க வேண்டும்
என்றும் உன்னடியில் இருக்க
அம்மா...

- A. Mahalingam
IInd B.Ed., Biological Science

## அம்மா

நான் பிறக்க எனக்காக
மறுபிறவி எடுத்தவளே!! அம்மா
நான் உயிர் வாழ உன்
உயிரை பணையம் வைத்தவளே!!! அம்மா
பெண் பிள்ளை என்று குறை கூறுவோர்
மத்தியில் தன் உயிர் என்று
வளர்த்தவளே!! அம்மா
பெண் பிள்ளை கொன்று விடு என்று
சொல்வோர் மத்தியில்... பெண் பிள்ளை
என்று விட்டுக் கொடுக்க மறுத்தவளே!!
அம்மா!

- K.Kavipriya,
IInd B.Ed., Biological Science



148062 R.பிரகாஷ் [உயிரறிவியல்]

# பயிற்சி

இரவெல்லாம் விழித்திருந்து
காலையில் பூக்கும் பூக்கள் கூட
கதிரவனை கண்டதும்
கருத்துவிடும் இக்கோடையிலே...
காலம் நேரம் பாராமல்
கஷ்டம் நஷ்டம் அறியாமல்
களப்பணியை கடமையாக செய்யும்
கண்ணியமான மாணவர்களே!!
எறும்பின் சுறுசுறுப்பையும்
தேனீயின் தன்னம்பிக்கையும்
தன்னலமற்ற நண்பர்களுடன் இணைந்து
தமது கல்லூரியிலேயே
பூத்து குலுங்கும் பூந்தோட்டத்திலே,
முதலில் பூத்த முதல்வருக்கும்
அன்பாக பழகும் ஆசிரியருக்கும்
ஆண்டு முழுவதும் அரணாக இருப்போம்..
அதற்கு முன்னுதாரணமாக
அடிட்டோரியத்தை அலங்கரித்து
அன்பாக உபசரித்து அனைவரும்
இணைந்து கொண்டாடுவோம்
ஆண்டுவிழாவை சீரோடும் சிறப்போடும்..
பயிற்சி ஆசிரியராக பயின்றதை
பள்ளியில் பயன்படுத்துவோம்
பணிவோடும் பண்போடும்
படிக்கும் மாணவர்களோடும்...

- R.Kunchannan
Ist B.Ed., Physical Science



# Colour

Everyone of us are unique in our colors
We do change our colours often in accordance
It's not a great job to be a kind one to all
But it's never easy to be true to even two;
Never mind, Be Original
Copies will be washed out
And there stands should the original all alone at the top
with a highest pride!
Pride, Greed, Lust, Envy, Gluttony, Wrath and
Sloth are not the seven deadly sins but
the changing of colors according to time,
place, person and so on is the greatest
sin in the world !!!

- Sinthu Manikkam

# Bruce Lee Quotes

Knowledge will give your power,
but character Respect
Then Successful warrior is the average man
with laser like Focus
I fear not the man who practiced
10,000 Kicks, but I do fear the man
who has practiced one kick 10,000 times
The most dangerous person is one
who listens, thinks and observes
Belive in yourself

R.S.Pavithran
I-B.Ed., (English) CPL
18B059




பட்டமேற்பு விழா 2015-2017



முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழாவில்




பேரவை துவக்க விழா 2018-2019



YRC விழிப்புணர்வு பேரணி



விளையாட்டு விழா நிகழ்ச்சி



கலைநிகழ்ச்சி சான்று வழங்குதல்

Scanned with CamScanner

# TEACHER'S PLEDGE

I Solemnly Pledge to what I Hold Dearly that as a Teacher

I Will Practice My Profession with Honour

I Will Abstain from Using Teaching Practise

Considered Inappropriate and

I Will Follow the Students and Guidelines for

My Profession to the All Most of My Power

Always Reaching for Excellence,

I Will Continue to Learn and Enhance

My Teaching Skills throughout My Career

I will be a Positive Role Model for Children and Youth and do

All that I can to Help them Acquire the Skills,

Knowledge and Desire they Need in

Order to Enjoy a Lifetime of Physical Activity

Scanned with CamScanner

# TEACHER

*"The Mediocre teacher tells*
*The good teacher Explains*
*The Superior teacher demonstrates*
*The great teacher inspires."*

*- Arnald*

*"A Teacher can never truly teach*
*unless he is still Learning himself*
*A lamp can never light another lamp*
*unless it contiues to burn its own flame."*

*- Rabindranath Tagore*

Scanned with CamScanner